செ.கு.எண் - 87 நாள் :- 27-02-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.2.2012

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.கல்யாணசுந்தரம் அவர்கள் 3.2.2012 அன்று பணி நிமித்தமாக சீர்காழி சென்று வருகையில், சீர்காழி பைபாஸ் சாலையில் சாலை விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.சுப்புராஜ் அவர்கள் 20.2.2012 அன்று பணியில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டு, பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர் கல்யாணசுந்தரம் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்புராஜ் ஆகியோர் பணியில் இருக்கும் போது காலமானார்கள் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. பணியில் இருக்கும் போது காலமான இவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவங்களில் காலமான தலைமைக் காவலர் கல்யாணசுந்தரம் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்புராஜ் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ. ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9